**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் சித்திரைத் திங்கள் 08 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 431/2022-ல்**

**அசல் வழக்கு எண்.14/2022**

குமாரசாமி .... மனுதாரர்/பிரதிவாதி

**// எதிர்//**

மகாலெட்சுமி ....வாதி/எதிர்மனுதாரர்

இம்மனு 03.11.2022 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று (24.03.2023) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. S. விஜயன், திரு.K.சிவசுந்தர் ஆகியோர்கள்** முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. P. ராதா** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று(21.04.2023) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது, கடந்த 21.07.2021 ம் தேதியில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரரவை ரத்து செய்து (Set-aside) உத்தரவிடக்கோரி உ.ந.ச.கட்டளை 9 விதி 7-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :-

அசல் வழக்கில் வாய்தா போடப்பட்டிருந்தபோது மனுதாரர்/பிரதிவாதி நேரில் ஆஜராகாததால் 21.07.2021ம் தேதியன்று ஏற்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து செட்டசைடு செய்து வழக்கை கோப்பில் எடுக்கவேண்டும் கூறப்பட்டுள்ளது.

3. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**:-

கடந்த 21.07.2022ம் தேதியன்று கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டிருந்தநிலையில் ஆஜராகாமல் இருந்துவிட்டு பொய்யான காரணங்களை கொண்டு, காலம் கடந்து இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரையில் கூறப்பட்டுள்ளது.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

5. **இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

இம்மனுவில் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்கையில்....

இந்நீதிமன்றத்தால் கடந்த 21.07.2022ம் தேதி மனுதாரர்/பிரதிவாதி வருகையின்மையினாலும், போதிய வாய்ப்பளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 21.07.2022ம் தேதி மனுதாரர்/பிரதிவாதி பிரதான வழக்கில் தோன்றாத்தரப்பினராக பாவிக்கப்பட்டு மேற்படி வழக்கானது வாதி தரப்பு விசாரணைக்காக போடப்பட்டு வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.1-ன் விசாரணை முடிக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் பரிசீலிக்கையில் ....

இவ்வழக்கைப்பொருத்தவரை பிரதிவாதி கிரய சாசனம்செய்து கொடுக்க வேண்டி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் மற்றும் பணம் மீட்பு பரிகாரம்(Recovery of money) கேட்டு தாக்கல் செய்யப்படட பிரதான வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக கேட்கப்பட்ட பரிகாரத்தை பொறுத்து ஒரு முழுமையான தீர்வு பெறவேண்டுமெனில் இருபுறமும் கேட்டு அதன் பிறகே தீர்மானம் செய்ய இயலும் என்பதாலும், ஒரு தரப்பினரை மட்டுமே கேட்டு முடிவு செய்யப்படும் எந்த சங்கதியும் நிறைவானதாக இருக்காது என்பதையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித கஷ்டநஷடமும் ஏற்படபோவதில்லை என்பதை கருத்திற்கொண்டு இம்மனுவினை அனுமதிப்பதே உசிதம் என்று இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

**முடிவில், இம்மனுவானது கடந்த 21.07.2022 தேதி இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட மனுதாரருக்கு எதிரான ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ. 500/-ஐ இவ்வுத்தரவு நாளிலிருந்து 1 மாதக்காலத்திற்குள் செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (21.04.2023)அவையறியப்பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி. (மு.கூ.பொ)